



# திருமுருகன் செந்தமிழ்த் துதி

திரு முருக கான செல்வர்

கடையநல்லூர்

## திரு. எம். எ. மஜீத் அவர்கள்

பாடியது.

வெளியீடு;-

ஆத்மஜோதி நிலையம் — நாவலப்பிட்டி.

விலை சதம்:

-/50

# பதிப்புரை

நக்கீரர் காலத்தில் தொடங்கி முருகன் புகழ் வளரத் தொடங்கியது. அருணகிரியார் காலத்தில் முருகன் புகழ் உச்சநிலை அடைந்தது. நாவுக்கரசரே நங்கடம்பன் என்று முருகனை உரிமைகொண்டாடி முருகன் மூலமாகச் சிவபெருமானை அறிமுகம் செய்து வைக்கின்றார்.

முருகன் புகழைப் பாடியவர்கள் பலர். அப்பாடலைப் பாராயணம் செய்பவர்கள் இன்னும் பலர். பக்தியை உண்டாக்கப் பாடுபவர்கள் ஒரு சிலர். அவருள் ஒருவர் கடையநல்லூரார் திரு. M. A. மஜீத் அவர்கள். ஈழத்தில் பிறந்து இந்தியாவில் வாழ்க்கை நடத்தும் மஜீத் அவர்கள் பிறப்பினால் இஸ்லாமியர் ஆயினும் உள்ளத்தால் முருகபக்தர். அல்லாவைப் பாடிய வாயால் அறுமுகனைப் பாடி அருள்பெற்றவர்.

திருத்தணியில் திருப்படிவிழா வருடந்தோறும் நடத்தி அன்னதானமும் செய்து உலகப் புகழ்பெற்றவர் திரு. மஜீத் அவர்கள். அவருடைய பாடல் பக்தியோடு சமரசத்தையும் மக்கள் உள்ளத்தில் பதியச் செய்வன. பக்திப் பாடகராக முதன்முதல் ஈழம் வரும் இச்சமயத்தில் அவர் விரும்பிப் பாடும் பக்திப் பாடல்களை வெளியிட்டு அவரது ரசிகர்களை மகிழ்வித்தலில் ஆத்மஜோதி நிலையமும் தனது பங்கை ஓரளவு செய்தலில் மகிழ்ச்சி அடைகின்றது.

ஆத்மஜோதி நிலயத்தினர்.

# பதிப்புரை

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

உ

மாதா, பிதா, குரு, தெய்வம் துணை

# திரு முருகன் செந்தமிழ்த் துதி

## மஹா கணபதி துதி

இராகம்: நாட்டை தாளம்: ஆதி

பல்லவி

அனாத ரட்சகனே, குணநிதி
விநாயகா மஹா கணபதி (அ)

அனுபல்லவி

ஜனார்த்தனன் மருகா குகன்சோதர
சகல வாழ்வும் தருவாய் லம்போதர (அ)

சரணம்

அவ்வைக்கு கயிலை அளித்த ஓங்கார
ஆகுவாகனனே ஐங்கர தீரா
தெவ்வர்களைச் சிதைத்த செல்வனேதீரா
தில்லை நடராஜன் திவ்ய குமாரா. (அ)

முடுகு

ஆனைமுகவனே ஞான பகவனே
வானவர் துதிசெயும், மோனப் பரஞ்சுடரே (அ)

அற்புத விற்பன கற்பனை கடந்த.
தற்பர சிற்பர, கற்பகமே பிரணவ (அ)

அடாது துயர்புரி, கஜமுகா, சுரனை,
விடாது வதைசெய்த விக்கினேஸ்வரனே (அ)

ஆதரவு. நீயலதிவ் உலகினில்
ஏதிலையே, மோதக, கராதிப (அ)

அருந்தமிழில் உனைநினைந்து தினந்தினம்
அனந்தபதம் புகழ்ந்திடவும் அருள்புரிவை. (அ)

2

## சரஸ்வதி துதி

ராகம்: கல்யாணி தாளம்: ஆதி

பல்லவி

தாயே கலையிற்பிறந்தாயே பொதிகை வளர்ந்தாயே
இசையிற்சிறந்தாயே செந்தமிழ்த்தெய்வத் (தாயே)

அனுபல்லவி

மாயே மணிமந்திரத்தூயே உனையல்லாது
நாயேன் எனக்குதவி நானிலத்தில் வேறேது (தா)

சரணம்

மூக்கண்ணன் தனைத்தூது செல்லவிடுத்தாயே
முதலையுண்ட பாலனை வரவழைத்தாயே
அக்கரையாய் ஏட்டினை எதிர்வரச்செய்தாயே
அறுபத்து நான்குகலை யாகவும் அமைந்தாயே (தா)

சந்தவடிவாய் எங்கும்தழைத்த பெண்மானே
சகல மொழிக்கும் பிச்சை தந்தவள் நீதானே
கந்தப்பெருமான் வாக்கில் கதித்தசெந்தேனே
கன்னியெனும் பெயராளே கைதொழுதேன்உனைநானே(தா

திருவாசகம், திருக்குறள், தேவாரம்
திருஅருட்பா, திருப்பா, சிலப்பதிகாரம்
திருவிளையாடல், காந்தம், தண்டியலங்காரம்
திருப்புகழ் பாரதம் ராமகா தை நீதிசாரம் (தா)

திருமூலமந்த்ரம் பாகவதம் திருத்தொண்டர் புரா
ணம் தொல்காப்பியம்
திருப்பாம்பன்சாமி குமரகுருபரர் தெய்வநூற்பிரமாணம்
அருணசல புராணம், அரிச்சந்திர புராணம்
ஆகபல நூற்களாய் அமைந்த உன் அருள்வேணும் (தா)

## சிவபெருமான் துதி

ராகம்: தோடி தாளம்: ரூபகம்

### பல்லவி

அந்தாசன் தன்னையே மணம் செய்ய
ஆவல்கொண்டாய் வேண்டாம் தேவி நிதானியே (அந்)

### அனுபல்லவி

எந்தஉலகும் இரந்துண்ணும் ஆண்டி
எண்ணை முழுக்கற்றிடும் சடையாண்டி
சந்ததம் சுடலையில் புரள் வாண்டி
சாதிகுலம் சுற்றம் ஏதும் இல்லாண்டி (அந்)

### சரணம்

1 இன்னமும் சொல்லட்டுமா - நான்
இம் மட்டில் போதுமென்றால் நிறுத்தட்டுமா
அன்னம் அறிகிலான் நஞ்சை உண்டாண்டி
ஆடையின்றிக் கரித்தோல் புனைந்தாண்டி
இன்னலின் மாமன் தலைத்துணித்தாண்டி - அதை
இல்லையென்றே மழுவை எடுத்தாண்டி (அந்)

2 சொல்ல வெட்க மல்லவோ மதிஉள்ள
தோகையரே இன்னும் வாகாய் நான் சொல்லவோ
தொல்லை யுடையவன் பல் இளிப்பாண்டி
துரிதமாய் முப்புரம் எரித்தாண்டி
வல்லமை யாய் கிழமாடு ஏறும் ஆண்டி
வம்புசெய்கின்றவன் கிழவன் பிச்சாண்டி (அந்)

## பரா சக்தி துதி

ராகம்: *பிலஹரி* தாளம்: ஆதி

*பல்லவி*

சுந்தரியே சோமசுந்தரியே சிவகாம (சுந்)
பவதோஷ மற்றிட நற்றிருவருள் புரிசிவ (சுந்)

*அனுபல்லவி*

அந்த ரிகர கபாலிநீ கோமள
மானசூலி மாபவானி சியாமளே (சுந்)

*சரணம்*

1 ஆதிபகவதி கல்யாணியே கரிபுர
மதளணி அரன்மகிழ் அம்மையே தெரியுர
மோதுவர் எனக்குதவா விடில் பரிபுர
ஒலிதரு மலரடி ஒளிர்தரு திருபுர (சுந்)

2 அல்லும் பகலும் உந்தன் அடியிணை சாட்சி
ஆகவே துதிசெய்தேன் அருளுவை காட்சி
வல்ல செழியன் மகளாய் அரசாட்சி
மதுரை தனைபுரிந்து வாழும் மீனாட்சி (சுந்)

3 இந்திரவியம்புவி எரிவெளி பவனம்
எல்லாம் உன்மயமன்றி வேறில்லை கவனம்
மைந்தன் மிசைவையாததேன் திரிபுனம்
வாழுநர் ஏற்றிட வருகடம்பவன (சுந்)

## திரு முருகன் துதி

ராகம்: அடாணு தாளம்: ஆதி

பல்லவி

முருகன் அருள் இருக்க பயமேது
மூடமனமே இது ஏன் தெரியாது (முரு)

மூவுலகும் ஆவலோடு துதி செய்யும்
தேவ தேவ தேவாதி தேவன் என்னும் (முரு)

அனுபல்லவி

உருகும் அடியார்கள் உறவைமட்டும் விடாது
உணர்வோடு பழகினுல் எதுமுடியாது (முரு)

சரணம்

திருமுருகாற்றுப் படைசொன்ன நக்கீர துரையை
சிறை விடும்படித் துணை செய்தது யார்?

திவ்விய பாம்பன் சுவாமிகள் சீரடி முறிந்ததைத்
தெரிந்து வேலினுல் மீண்டும்பொருத்தின தார்?

ஒரு முருகாஎன்ற பெண்ணுக்குத் தருணமே
ஓடிவந்தே கையை உதவியதார்?

உயர் திருப்புகழ் சொன்ன அருணகிரியை மலைமேல்
உயிர் விடாத வண்ணம் தடுத்தது யார்?

உசித பழிக் கூத்தர்க்குதவியதார்
ஒளி வடலூரரர் முன் தோன்றினதார்?

நிசிசரரை வதைத்த நிர்மலன் யார்?
நிஜம் தெரிந்து இனிதிருந்து வடபழனிதிரு (மு)

ராகம்: ஆனந்த பைரவி                                    தாளம்: ஆதி

பல்லவி

ஆனந்த வாழ்வு தருவான் அறுமுக சரவணன்
அணுவும் சந்தேகமில்லை
அப்பன் எப்பொழுதும் பக்கத்துணையிருந்து (ஆ)
அடியவர் இறையவன் முடிவுடைத்திரு மயில்க்
கொடியுடையவன் எங்கள் வடபழனி முருகன் (ஆ)

அனுபல்லவி

ஞானம் தருவான் சுகமோனம் தருவான் அவனை
நம்பிநின்று அன்புகொண்டு அனுதினம்
எம்பிரானே தம்பிரானே என்றிடில் (ஆ)

சரணம்

1 கண்கண்ட தெய்வம் கலியுக வரதன்
கார்த்தி கேயன் கந்தன் கடம்பன்
காங்கேயன் ஓங்கார தண்டாயுதன்
கண்கள் ஈரொன்பதுடைய விசாகன்
பண்கொண்டு பாடும் நடராஜன் மகனை
பழனிஆண்டி சரவண சண்முகனை
பைந்தொடி குஞ்சரி வள்ளி கொழுனனைப்
பராத்பரனை நிராமயனைப் பரவிட (ஆ)

2 பாடும் அருணகிரியார் திருப்புகழும்
பாம்பன் சுவாமிகள் பஞ்சாமிர்த வண்ணமும்
தேடும் வள்ளலார் திருஅருட்பாவும்
சிதம்பர சுவாமிகள் சன்னிதிமுறையும்
ஈடில்லாத திருச் செவிகளில் கேட்டு
இன்அருள் புரிந்த எம்பிரான் நமக்கும்
கோடி கோடியாய் செல்வநலம் அருளி
கோலமயிலில் வடிவேலுடன் எதிர்வந்து (ஆ)

ராகம்: சிந்து பைரவி                                        தாளம்: ஆதி

பல்லவி

தணிகை நெடுங்கிரி குகனை வணங்கிட
சகல அன்பர்களும் வருவீர்
தகுதியான நிலை பெறுவீர்                    (தணி)

அனுபல்லவி

பிணமாம் முனமே பெருமான் அருளைப்
பெறுவோம் பெறுவோம் பிறவா நிலையையும்
வணமாதர் சுதர் தமராதியரும்
வளர்சோதரர் தோழருமாய்க் கூடியே          (தணி)

சரணம்

உள்ள மகிழ்ச்சியுடன் கள்ளமனம் ஒழித்து
தெள் அறிஞர்களுடன் சேர்ந்து

எள்ளும்பல மதத்தின் எண்ணம் இல்லாமலே
இறைவனுக் கிறைவனைச் சார்ந்து

அள்ளும் சுவையுடைய செந்தமிழ்த்தேன் எனும்
அமுதத் திருப்புகழில் தேர்ந்து

அரகர, முருகா, குமரா, கந்தா
அப்பாஎன அன்பார்ந்து

விள்ளற் கருமோன வெள்ளத் துயர்வான
வள்ளல்எனும் ஞானவள்ளி அம்மைக்கான (தணி

ராகம்: சிம்மேந்திர மத்திபம்    தாளம்: கண்டநடை: ஆதி

பல்லவி

**உன்னை விடவே மாட்டேன் உறுதியிது முருகா**
**உலகமுழுவதையும் அளந்தவன் உரிய மருகா (உ)**

அனுபல்லவி

**அன்னை தந்தை குருதெய்வம் நீ என்றிருந்தேனே**
**அடிமை என்னை இந்தவிதம் சோதித்ததும் ஏனே (உ)**

சரணம்

(1) பார்க்கிறவர் பரிகாசம் செய்திடவே தோணும்
படிஎன்னை விடலாமோ பழிதான் பிரமாணம்
ஊர்க்குருவிமேல் தொடுப்பதோ ராமபாணம்-
இந்த
உலகமே போனாலும் நீஎனக்கு வேணும் (உன்)

(2) தலைமேலே பல கோடி அம்பு பறந்தாலும்
தணிகாசலா என்ன, தடைகள் வந்தாலும்
இலகாசைகாட்டி இன்னும் ஏமாற்றினாலும்
இதுமட்டுமல்ல வேறென்ன ஆனாலும் (உன்)

உன்னைவிடவே மாட்டேன் உறுதியிது முருகா
தணிகைமலைமுருகா பழனிமலைமுருகா வடபழனி
முருகா.

## திருமுருகன் பதிகம்

கொண்டாடும் அண்டர்முதல் தொண்டர்வரை போற்றிடும்
குகன் வருகிறார் பராக்கு
குரு இராமலிங்க வடலூரருக் கருளும் என்
கோன் வருகிறார் பராக்கு

திண்டாடும் நக்கீரருக்கருள் செய்தஅறுமுகச்
சிவம் வருகிறார் பராக்கு
திரு அருணகிரி அதனில் ஒரு அருணகிரியை
சேய்வருகிறார் பராக்கு (யாள்

பண்டைஇயல் இசை நாடகத் தமிழின் வடிவான
பரன் வருகிறார் பராக்கு
பாம்பன் வளர் குமரகுரு தாசருடன் அமுது
பதி வருகிறார் பராக்கு (ண்ட

வண்டமிழ் குமரகுரு பரர் பகழிக் கருளும் எம்மான்
வருகிறார் பராக்கு
வணங்குமடியார்கள் துயர்தீர்க்கும் என் வடப
ஆண்டவன் வருகிறார் பராக்கே. (ழனி

## முருகன் துதி

கண்ணப்பர்க்கு ஆறுநாளில் கவின்முத்தி
தந்தோன் மைந்த,
எண்ணப்பன் நூல் இயற்றும் இயல்பும்
செந்திருவொடு ஆயுள்,
திண்ணப்பன் என்னும் தேகதிடமும்
நோயற்ற வாழ்வும்,
விண்ணப்பம் செய்தேன் தணிகை
வேலவா அருள் செய்வாயே.

ராகம்: இராகமாலிகை தாளம்: ரூபகம்

கண்ணிகள்

(1) தணிகை என்றவுடன் மனதுக்கோர்
சாந்தி பிறக்குதம்மா,
உணர்வுள்ள பக்தர்களைக் கண்ணில்காண
என் உச்சி குளிருதம்மா. (தணி)

(2) மாமலை கண்டவுடன் பிறவி
மயக்கம் அகலுதம்மா முருகன்
நாமத்தை சொல்லச்சொல்லத்தேன் எனஎன்
நாவும் ருசிக்குதம்மா........................ (தணி)

(3) பாடிப் படியேறி முருகனைப்
பார்க்காத கண்களெல்லாம்
சாடும் பெரும்புண் எனஎவரும்
சாற்றத் தடையும் உண்டோ.......... (தணி)

(4) சிவகுருவேல் முருகா சரவணச்
செல்வம் என்று ஏத்தாதவாய்
அவலம்பலபேசி நாளும் அழியும்
அசுசி நிறைந்த கால்வாய்............... (தணி)

(5) இந்திரனுக்கு முடி ஈந்தவனை
ஏத்தாத மானிடர்கை
அந்தோபெரும் உலக்கை - பலகை
அநியாயம் சேர்புழுக்கை.................... (தணி)

(6) குஞ்சரி வள்ளியுடன் குகனும்
கொஞ்சிடும் காட்சி கண்டால் - நம்
சஞ்சலம் தீர்ந்திடுமே சகல
சம்பத்தும் வாய்ந்திடுமே.................. (தணி)

ராகம்: காம்போதி தாளம்: ஆதி

பல்லவி

காணக்கண் கோடி வேண்டும்
கந்தன் என்பவனைக் (காண)

அனுபல்லவி

பூர்ண சந்திரனைப் பழிக்கும் ஆறுமுகத்தில்
புன்னகை தவழ்ந்திடும் அய்யன் முருகனைக் (காண)

சரணம்

(1) கோரும்வரம்ஈந்து குறையகற்றும் ஓர்கரம்
யாரும்வருக என்று அழைத்திடும் ஓர்கரம்
மாறாத ரோகத்தை மாற்றிவைக்கும் ஓர்கரம்
தேவர்குறைகளைத் தீர்ப்பேன் என்ற ஓர்கரம்
சூரபத்மனைத் துணித்த தோர் கரம்
தெய்வ யானையை அணைத்ததோர் கரம்
பக்தர்கட் கபயமளிக்கும் ஓர்கரம்
சக்தி வேல்தனைத்தரித்த கரங்களைக் (காண)

(2) வேடமங்கையைகாணத்தேடிவனத்தில்சென்று
மோகங் கொண்டு வளையல் விற்றதிருக்கரம்
தேனும் தினைமாவும் தேவிதர உண்டு
சுனையில் நீர்உண்டிட சென்ற திருக்கரம்
கானவள்ளியைக் கலங்கச் செய்திட
யானை முகத்தனை அழைத்ததோர் கரம்
மான் மகள்தனை மணந்ததோர் கரம்
மாதா ராஜேஸ்வரி மகிழும் பாலனைக் (காண)

ராகம்: தன்யாசி தாளம்: ஆதி

பல்லவி

இருப்பவனே எங்கும் இருப்பவனே - எம்
இடர்கள் களைந்திடவே தணிகை மலைமீதும் (இரு)

அனுபல்லவி

திருப்பரங்கிரி செந்தூர் திருவாவினன்குடி
திருவேரகம் திருக் – குன்றுதோறாடல் பழமுதிர்
சோலைமலையில் (இரு)

சரணம்

திருப்புகழ் திருமுருகாற்றுப் படையிலும்
திருப் பாம்பனூர்தம் நூல்களிலும்
திருப்பாவிலும் திருஅருட்பாவிலும் குறள்
தேவாரம் திருவாசகங்களிலும்
தெய்வ சேக்கிழார் பட்டினத்தார் கம்பன்
செய்த இராமாயணக் கோவையிலும்
சைவ வைணவ குர்ஆன்களிலும் பைபிள்
சத்யவேத வில்லிபாரதத்திலும் (இரு)

ராகம்: சிம்மேந்திமத்திபம் தாளம்: ஆதி

பல்லவி

நல்லது செய் மனமே இனியாகிலும்
அல்லது செய்துநீ அனுபவித்தது போதும் (நல்ல)

அனுபல்லவி

வல்லஎமன் எப்போது வருவானோ தெரியாது-இந்த
வாழ்வும் சதமல்ல வீண்வாதங்கள் புரியாது-(நல்ல)

சரணம்

என்னோடு பழகியும் இது தெரியாதா
எதிர்த்து ஜெயித்ததுண்டா - இமைக்கொரு சூதா
உன்னோடு சேர்ந்து கெட்டேன் வீண்வாதா
உயர்வு பெற மனமே என்சொல் கேள் ஈதால் - (நல்ல)

ராகம்: கல்யாணி தாளம்: ஆதி

பல்லவி

அப்போதல்லோதெரியும் இப்போதெரியாதப்பா
அமர்ந்திருமனமே ஏன் துள்ளுகிறாய் உனக்கு (அ)

அனுபல்லவி

எப்போதெப்போதென்று இருக்கும் எமனால் நாளை
எல்லாம்முடிந்து ஜீவன்மல்லாடுகின்றவேளை (அ)

சரணம்

ஒப்பும் உன்மனைவிக்கு உண்மையாய் நடித்ததும்
ஊரில் உள்ள பெண்களை அடுத்ததும் கெடுத்ததும்
தப்புசெய்தே பலரை தவிக்கவே விடுத்ததும்
தடுத்துக் கேட்டோரை ஏசிஇடித்ததும் அடித்ததும் (அ)

வாயிழைத்தோரைக் கண்டால் மனம்நோகப் பேசுவதும்
வாங்கினகடனைக் கேட்டால் ஆங்காரங் கொண்டேசுவதும்
கோயில் குளத்தைக் கண்டால் கும்பிடக்கை கூசுவதும்
கொலைபுலை அநியாயமாய்க் குடித்துவிட்டு ஆடியதும் (அ)

## முருகன் துதி

விருத்தம்

கருத்தன் நீ கலைவினோதக் கந்தன் நீ
கண்ணுதற்சேய்
ஒருத்தன் நீ உனையலாது உறுதுணை
யெனக் கிங்குண்டோ
பெருத்தநல் வாழ்வும் ஞானப் பெருக்கும்
எண்ணிய தெல்லாமும்
திருத்தணிகேசா தந்துன் திருவருள்
பெறச் செய்வாயே.

ராகம்: இந்தோளம் தாளம்: ஆதி

பல்லவி

ஆணவமட்டிலும் கொள்ளாதேநீ
அதனுல் தீதே அடைவாய் தப்பாதே மனமே (ஆ)

ஆடம்பரம் வீண்டம்பம் இருந்தாலும்
நாடெங்கும்பணியும் ஞானம்முதிர்ந்தாலும் (ஆ)

அனுபல்லவி

வாணன் ஆனுல் என்ன வள்ளல் ஆனுல் என்ன
காணும் உலகினுக்கே கர்த்தன் ஆனுல் என்ன (ஆ)

சரணம்

பெரும் நவநிதியில் குபேரன் ஆனுல் என்ன
பிரபஞ்சம் அஞ்சும் பெரிய சூரன் ஆனுல் என்ன
அரும்பதவி பட்டத்தில் அய்யன் ஆனுல் என்ன
ஆண்டவனேடு பேசும் அண்ணல் ஆனுல் என்ன
அளவிலாத இசைகலே பயின்ருல் என்ன
அரைநொடியில் கவிமழை பொழிந்தால் என்ன
இளமை அளகுபுகழ் எதுஇருந்தால் என்ன
ஏற்ற மானகுலந்தனில் பிறந்தால் என்ன
அன்பும் அறிவும் நேர்மையும் ஒற்றுமையும்
அரிய ஈகைதயைதெய்வ பக்தியும்
மன்புவிதனில் தமிழ் இன்பமும் மறந்து
மாதர் மயலும் சூதுவாதும் நிறைந்த (ஆ)

ராகம்: கரகரப்பிரியா தாளம்: ஆதி

பல்லவி

வாய் இளைத்தவன் உனக்கு நான்தானு — இப்படி
மவுனம் சாதித்தால் மட்டும் விடுவேனு-முருகா(வா)

அனுபல்லவி

மாயமந்திரதந்திரம்எனக்கொன்றும்தெரியாது உன்
மலரடிதெரியும் மற்றவை தெரியாது-உனக்கு (வா

சரணம்

நான் என்ன அருணகிரியா நக்கீரரா
நவிலும் வடலூர் வள்ளல் புகழியா கம்பரா
ஞானபாம்பன் குருவா தாயுமானத் தேவரா
நடராஜன்குரு ஏகைசிவ ஷண்முகநாதரா (வா)

உன்னையடைய வழியுணர்ந்தோர்கள் ஒருகோடி
உளறுகின்றேன் எனக்குத்தெரிந்த பாடல்கள் பாடி
என்னசெய்தால் உன்கிருபை எனக்குவரும்முன்னுடி
இயம்பு பிழைத்துக் கொள்வேன் ஏழை எந்தனைத் தேடி

ராகம்: இந்தோளம் தாளம்: ஆதி

புகழ்

கலகவிழி மகளிரின்பக் கனலாலே
கருகியுடல் மிகவு நஞ்சிச் சருகாயி
குலவுவெறி மடையர் வஞ்சச் செயலாலே
கொலைகளவு குடிலிழைத்துத் திரிவேனை
உலகியல்பு முழுதுணர்ந்தப் பெரியோரால்
உனதுகழலிணை வணங்கப் பழகாமல்
பலநினைவில் உழல்வதென்றுத் தவிர்வேனே
பணிதணிகை யிலகுகந்தப் பெருமாளே.

ராகம்: தோடி　　　　　　　　　　　　　　தாளம்: ஆதி

பல்லவி

திருத்தணி காசலத்தில் இருக்கும் முருகனைப்போய்
தெரிசிக்க வாராய் நெஞ்சமே
இந்ததேகம் விழும்முன்னமே (திருத்)

அனுபல்லவி

பருத்த உடலை நாளும் பெருத்திடும்படி செய்து
பலன் என்ன கண்டாய் சொல்லு நலம் பெற
இனியேனும் (திருத்)

சரணம்

கண்ணுள்ள போதன்றே காட்சி நீ அறியாயோ
காலன்வரும் நேரத்தைக்கணக்கிட்டுத் தெரிவாயோ
மண்ணும் பெண்ணும் பொன்னும் மாயம் என்று
ணராயேநீ
மடிந்தால்உன்கூடநாளைவரும்என்றுநினைத்தாயோ.

வருத்தம் எல்லாம் துடைப்பான்
வறுமைப் பிணிதடுப்பான்
ஒருத்தன் அவன்புகழை ஓத
சுகம் கொடுப்பான்
கருத்தன் கானமயில் நிருத்தன்
வள்ளியார் கொஞ்சும்
பொருத்தன்நம் பிறவியைவேர்
அறுத்தெறிவான் ஆதலால் (திருத்)

ராகம்: பியாகடை தாளம்: ரூபகம்

பல்லவி

நாதமானசங்கீதத்திலே, மனித பேதமென்பதில்லையே(நா)

அனுபல்லவி

ஜாதிமதம் நிறம் தேசவேற்றுமை விகாதங்கள்
இன்றி இந்தபூதலமே ரசிக்கும்

சரணம்

தேன் வெல்லம் சர்க்கரை நாவில் பட்டோர்க்கெல்லாம்
தித்திக்காமல் போகுமா?
சென்மத்தால் எவரும் உயர்வு தாழ்வு என்பது
சிறிதும் சரியாகுமா?
மானும் பசுவும் பாம்பும் பட்சி ஜாதியுங்கூட
மலைக்காதே இதில் நாமா?
மாறுதல் செய்து கொண்டு இடம் பொருள் ஏவலால்
மாற்றி அமைக்கலாமா?
குயில் கறுப்பானாலும் குரலிலே வெறுப்பேது
கோணின வீணையும் ஓசையில் கோணாது
பயிலும் கலைஞர்கட்குள் பாரபட்சம் தகாது
பட்டம் பதவி இதில் பார்க்கவே கூடாது (நா)

ஈஸ்வர சொரூபம் சங்கீதம் என்று
எவரும் அறிந்தது தானே?
இசையை வளர்ப்பவன், இசைப்பவனை வளர்ப்பது
இயல் பென அறியாதது ஏனோ?
பேசும் சுஸ்வரமே பேரின்பமுக்தி இது
பெரிய ஞானிகள் மொழிதானே
பிரபல அருணகிரி நால்வர், தியாகராஜர்
பெருமைக் கிழிவுதேடல் ஏனோ.
ஆதலினால் நொண்டி குருடன் ஆனாலும்
அங்கஹீனன் கிழவன் மிடியன் ஆனாலும்
பாதகமில்லா சங்கீதமாய் இருந்தால்
ஆதரிப்பது பொது நீதிஎன்பர் மேலோர். (நா)

ராகம்: நாட்டைக்குறிஞ்சி தாளம்: ஆதி

பல்லவி

தமிழர்க்குரிய திருத்தணிகை மலையானைத்
தரிசிக்க என்ன தவம் புரிந்தோம் (தமி)

அனுபல்லவி

அமிழ்தின் இனிய குகன்திருப்புகழ் பாடி
அடியருடன்கூடி ஆடித்தேடி (தமி)

சரணம்

காயம் நிலையாது பொய் பொய்
காமம் தொலையாது மெய் மெய்
தீயவினையை விட்டு உய் உய்
தெளிவுற நல்லறமே செய் செய்
மாயப்பெண்டுபிள்ளை பண்டுபதார்த்தம்
வகையில் மயங்கினல் வருமோகிருதார்த்தம்
ஆயசெல்வம் அந்நியத்தில் வியர்த்தம்
அறுமுகன் அடிமலர் அலவோ முக்யத்துவம் (தமி)

---

முரசு கரைதல், வாய்நாற்றம், பயறியா போன்ற
பல நோய்களுக்கு மிகச் சிறந்தது

# இமாலயன் பற்பொடி

ரின் ஒன்று 1 ரூபா — தபாற் செலவு 50 சதம்

இடைக்குமிடம்:-
ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி.

## ஸ்ரீமத் அருணகிரி நாதஸ்வாமிகள் துதி

ராகம்: பைரவி தாளம்: ஆதி

பல்லவி

**அருணகிரிநாத முனீந்திரர் போல அரிய குகதாசர்**
**அவனியில் உண்டோ (அரு)**

அனுபல்லவி

கருணைத் ததும்பும் கந்தன் கார்த்திகேயன்மீது - கற்
கண்டு பால்தேன் சீனியெனக் கொண்டு திருப்புகழ் ஓதும்

சரணம்

**முருகன் அருளினுலே மூத்தம்மை சேயாக வந்தார்**
மொய்குழல் மாதர்களின் வலைக்குள்ளே தயங்கிநொந்தார்
ஒருதெய்வ வழிபாட்டின் உண்மைப் பயனைத் தெரிந்தார்
ஓதும் பதினாராயிரத் தீதில் திருப்புகழ் தந்தார் (அரு)

## ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள் துதி

ராகம்: பீம்பளாஸ் தாளம்: ஆதி

பல்லவி

**ஜோதி ராமலிங்கம் அருட்பெருஞ் - ஜோதி**
**சுயமான ஞான தங்கம் சாதுசங்க (ஜோதி)**

அனுபல்லவி

**பாதி இரவில் அன்பாய் வடி வாம்பிகை**
**ஆதரவாய்த்தரும் அமுதுண்ணும் ஆண்டகை (ஜோ)**

சரணம்

**(1) உலகினில் சமரஸம் உற அவதரித்தார்**
**ஒருகலை தனை உடல்முழுவதும் தரித்தார்**
**பலமறைதனை அருட்பாவிலே விரித்தார்**
பசித்தவர்க்கு உதவிடும்படியே எச்சரித்தார் (ஜோ)

**(2) புலைகொலை ஒழித்திட புறப்பட்ட வீரர்**
**புத்தர் அகஸ்தியர் போல் போதித் தகைக்காரர்**
**இலகும் சிரஞ்சீவியாய் இருக்கும் உதாரர்**
**இன்ப நடராஜனை மறவாக் கெம்பீரர் (ஜோ)**

## ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் துதி

ராகம்: இராகமாலிகை தாளம்: ஆதி

பல்லவி

**ஒரு தரமாகிலும் பாம்பன் சுவாமிக்கு தொண்டு**
**உண்மையாய்ச் செய்தாயா மனமே (ஒரு)**

அனுபல்லவி

**மறுமுறையும் செய்ய வாய்க்குமோ வாய்க்காதோ**
மடி பவரைக் கண்டேனும் உன்மதி திருந்தாதோ (ஒ)

சரணம்

(1) எத்தனை நாளைக்கி இந்த மாதர்கள் சிநேகம்
எப்பொழுதும் உனக்கு இதுவா உத்யோகம்
வித்தையிருந்தும் வீணே இல்லையே விவேகம்
வேண்டாம் கெடாதே சொன்னேன் இந்த
தேகம் சந்தேகம் (ஒ)

(2) காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்வதை மறவாதே
கண்கெட்டுப்போனபின்புகதிர்பூஜைஉதவாதே
ஊத்தைப்பல் போனல் மேலே ஒன்றும் பாடவராதே
ஓடி யாடித்திரியும் இந்த உணர்ச்சியிருக்கும்
போதே (ஒரு)

புகழ்

தாய்தா தையர் தமரும் உயிரான
தாரா திகளுறவும் உறவாமோ
பேய்போல் உலவிமிக நிதிதேடி
பேராசை வலையினில் உழல்வானேன்
வாய்போய் விழிசுழலும் அழிநாளில்
வாரா தொருதுகளும் அதனாலே
நீயே எனது துணை அருள்வாயே
நீதா தணிகைமலை முருகோனே.

## ஐய்யப்ப ஸ்வாமி துதி

### பல்லவி

சரணம் சரணம் குரு அய்யப்பா—பால
சாஸ்தாவே கிருபை செய்யப்பா. (சர)

### அனுபல்லவி

மரணபாதை வந்து எனைந்தொடராமலே
மாசுகமுரமனம் வையப்பா.
சந்ததும் சிந்தும் தமிழ்க்கொரு முதல்வனே
சதுர்புஜ அரிஹரன் தவப்பெரும்புதல்வனே (சர

### சரணம்

1. செந்தில்வேலனெனும் கந்தனே எங்கள்
தெய்வச்சபரிமலை ஐய்யப்பா
தேவர் முனிவர் நரர் யாவரும் துதிசெய்ய
திருவருள் புரிகிற மெய்யப்பா (சர)

2. கனகத்திருமேனி கமலமுகமும் எழில்
கருணைக்கண்கழும் என்மனத் தகலாதே
உனதடி பரவுவார் எவரும் புனிதராய்
உயர்நிலை அடைந்துள்ளார் புவிமீதே (சர)

### வெண்பா

அண்டரெலாம் உய்யவத்த ஆறுமுகத் தெம்பெருமான்
மண்டலத்தை யுண்டுமிழ்ந்த மால்மருகன்—தண்டைமலர்க்
காலும் அவுணர்களைக் கண்டவுடனே வதைக்கும்
வேலு மயிலுந் துணை.

### இன்னிசை வெண்பா

திரு விக்கிரமன் திருவிழியில் தோன்றி
சுரபதிவெண் வாரணத்தால் சோபையுடனே வளர்ந்து
வள்ளற்குகனை வதுவைகொண்ட குஞ்சரிஎன்
உள்ளக்கவலை யொழி.

ஒருவிகற்ப வெண்பா

அள்ளி யெடுத்தே அருநிதியைத் தந்தெமது
உள்ளத் துயரை யொழிப்பதற்கு—விள்ளரிய
தெள்ளுதமிழ் முருகன் தேவி திருத்தணிகை
வள்ளியம்மே நீமனது வை.

இராகம்: மத்தியமாவதி தாளம்: ஆதி

வாழி வாழி வேலும் மயிலும்
கோழிக் கொடி யுமே
வள்ளலெங்கள் தணிகை முருகன்
வனச பதமுமே
தாழ்விலாத இடும்பனோடு அருணகிரியுமே
தாசரெங்கள் பாம்பன் சுவாமி
தமனியபதமே சாது
சாமி சரணமே இந்த
தரணி முழுதுமே என்றும்
வாழி அன்பர் வாழி தமிழ் வாழி
சைவம் வாழி
வாழி வள்ளி தெய்வயானை வாழி வாழியே.

ஜோதி ஓம் சுபம்.

வேலுமயிலுந் துணை.

# ஆத்மஜோதி நிலைய வெளியீடுகள்
## அரிய ஆத்மீக நூல்கள்

| | | |
|---|---|---|
| 1 | திருப்புகழ் பூஜாமலர் | .50 |
| 2 | சமரச ஞானக் கோவை - க. இராமச்சந்திரா | 5.00 |
| 3 | ஆத்மநாதம் - மகரிஷி சுத்தானந்தர் | 3.00 |
| 4 | தீங்கனிச் சோலை - பரமஹம்சதாசன் | 2.50 |
| 5 | சைவ இலக்கிய கதா மஞ்சரி - அருணுசல தேசிகர் | 3.00 |
| 6 | பாட்டாளி பாட்டு - மகரிஷி சுத்தானந்தர் | 1.50 |
| 7 | இளங்கோவின் கனவு - நடராஜன் | 2.25 |
| 8 | ஆத்மஜோதி மலர் | 1.00 |
| 9 | நவராத்திரிப் பாடல் | .50 |
| 10 | கந்தரனுபூதி | .15 |
| 11 | கூட்டு வழிபாடு | .30 |
| 12 | கந்த சஷ்டி கவசம் | .15 |
| 13 | நித்திய கரும விதி | .25 |
| 14 | செல்லச் சந்நிதி பாடல் | .15 |
| 15 | கதிர்காமப் பதிகம் | .25 |
| 16 | மார்கழி மாதப் பாடல் | .20 |
| 17 | பித்துக்குளி முருகதாஸ் பாடல் | .50 |
| 18 | திருநீற்றின் பெருமை | .10 |
| 19 | நாவலர் நாடகம் - மகரிஷி சுத்தானந்தர் | 2.00 |
| 20 | சிவானந்தரின் அருளுரைகள் | .60 |
| 21 | இவ்வாறு அருள்கிருர் சிவானந்தர் | .75 |
| 22 | பக்தி | .20 |
| 23 | கோபம் | .20 |
| 24 | பிரமம் | .20 |
| 25 | அவதாரம் | .20 |
| 26 | முக்கிய உபநிஷதங்களின் சாரம் - பாகம் 9 - 10 | .50 |

தபாற் செலவு தனி.

**வியாபாரிகட்குத் தகுந்த கமிஷன் உண்டு.**

## ஆத்மஜோதிநிலையம், நாவலப்பிட்டி
(இலங்கை)

# ஆத்மஜோதி

(ஓர் ஆத்மீக மாத சஞ்சிகை)

★ மனிதனை, மனிதனாக வாழவைப்பதற்கு வேண்டிய உன்னத கருத்துக்களைக் கொண்ட, இறைவன் மகிமையை உணர்த்தும் ஆத்மார்த்த, தத்துவ, யோக, உபநிடதக் கட்டுரைகள்.

★ தெய்வீகத் திருமணம் கமழும், பண்ணோடு இசை குலவும் தெள்ளு தமிழ்த் தீம்பாலமுதப் பாடல்கள்.

★ காலத்திற்குக் காலம் மனித குலத்தை ஈடேற்றத் தோன்றிய அவதார புருடர்கள், மகான்கள் ஆகியோரின் திவ்விய சரிதங்கள், அவர் தம் வரலாற்றுப் பேருண்மைகள்.

★ பெரியோர்கள் தம் வாழ்க்கையின் அனுபவங்கள் மூலம் சொல்லிப் போந்த முது மொழிகள்

இவையனைத்தையும் ஒருங்கே கொண்டு, கடந்த இருபது ஆண்டுகளாக இடைவிடாது சமயப்பணி புரியும்

## மாத சஞ்சிகை

இன்றே சந்தாதாரராகச் சேருங்கள்.

தனிப் பிரதி சதம் 30. வருட சந்தா ரூபா 3.00

ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி.

போன்: 353

அச்சுப்பதிவு;
ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம்,
நாவலப்பிட்டி,
போன்: 353.